ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

मज्जत्वम्भसि यातु मेरुशिखरं शत्रून् जयत्याहवे
वाणिज्यं कृषिसेवने च सकला विद्याः कलाश्शिक्षतु ।
आकाशं विपुलं प्रयातु खगवत्कृत्वा प्रयत्नं परं
नाभाव्यं भवतीह कर्मवशतो भाव्यस्य नाशः कुतः ॥

மஜ்ஜத்வம்பஸி யாது மேருஶிகரம் ஶத்ரூந் ஜயத்யாஹவே
வாணிஜ்யம் க்ருஷிஸேவநே ச ஸகலா வித்யா: கலாஶ்ஶிக்ஷது ।
ஆகாஶம் விபுலம் ப்ரயாது ககவத்க்ருத்வா ப்ரயத்நம் பரம்
நாபாவ்யம் பவதீஹ கர்மவஶதோ பாவ்யஸ்ய நாஶ: குத: ॥

भर्तृहरिः । பர்த்ருஹரி: ।

ஒருவன் ஜலத்தில் வெகுகாலம் முழுகிக்கொண்டிருக்கும்படியான சகதியை ஸம்பாதிக்கட்டும். ஒருவராலும் செல்லமுடியாத மேருவின் சிகரத்தையும் அடையட்டும். யுத்தத்தில் பலவானான சத்ருவையும் வெல்லட்டும். வியாபாரத்தில் விசேஷமான பொருளைப் பெறட்டும். ஸாகுபடி செய்வது, ஸேவகாவிருத்தி செய்வது முதலிய ஸகல வித்தைகளிலும் சிறந்த சக்தியையடையட்டும். தான் அதிகமாக முயற்சித்து மிகவும் விஸ்தாரமான ஆகாயத்திலும் பக்ஷியைப் போல் உயரப்பறக்கட்டும். பிறரால் செய்யவியலாத எவ்வித உத்தமமான கார்யங்களைச் செய்தாலும் தன்னால் அடையக்கூடாததை ஒரு ஸமயமும் அடைய முடியாது. முற்பிறவியில் செய்த கர்மவசத்தால் வரக்கூடிய ஸுகத்தையோ துக்கத்தையோ அனுபவிக்காமல் விலகாது. அவசியம் கர்மபலத்தை அனுபவித்தே தீரவேண்டும்.

முன் ஜன்மாக்களில் செய்த மிச்ரகர்மாக்களினால் இந்த ஜன்மம் ஏற்பட்டிருக்கின்றது, ஆகையால் அந்தக்கர்மாக்களாலளிக்கப்படும் சுகதுக்கங்களை விட்டு எவ்வித முயற்சியாலும் வேறுவிதம் அடையமுடியாது. ஆகையால் வீண்வேலை செய்யாமல் வரும் ஜன்மாவினால் நற்பயனைப்பெறவேண்டி இப்பிறவியிலாவது சாஸ்திரங்களில் கூறிய ஸ்வதர்மானுஷ்டானத்தைச் சரிவர நடத்திப் பிறவிப்பயனைப் பெறவேண்டுமென்று போதிக்கிறார். சுபம்.

உப-பத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

பிரபவஹூ வைகாசி-மீ ௧௩௨


## ஆத்மாநாத்ம விவேகம்.

(௨௯0-வது பக்கத்தொடர்ச்சி)

சிஷ்:—ஆத்யாத்மிகமென்றாலென்ன?

குரு:—சரீரத்தை ஆச்ரயித்து இருக்கும் துக்கத்திற்கு அதாவது வாத பித்த கபங்களால் உண்டுபண்ணப்பட்ட தலைவலி, ஜுரம், முதலான வியாதிகளுக்கு ஆத்யாத்மிகமென்று பெயர்.

சிஷ்:—ஆதிபௌதிகம் என்றால் என்ன?

குரு:—இதரப்பிராணிகளால் அதாவது, புலி, கரடி, திருடன் முதலியவைகளால் ஏற்படும் துக்கத்திற்கு ஆதிபௌதிகம் என்று பெயர்.

சிஷ்:—ஆதிதெய்விகம் என்றால் என்ன?

குரு:—தேவதைகளால் குளிர், தாபம், காற்று, வருஷம், மின்னல் முதலானவைகள் உண்டுபண்ணப்படும் துக்கத்திற்கு ஆதிதெய்விகம் என்று பெயர்.

சிஷ்:—ஸூக்ஷ்மசரீரமென்றால் என்ன?

குரு:—பஞ்சீகரணம் செய்யப்படாத பதினேழு விதமான மெல்லிய சரீரத்துக்குச் ஸூக்ஷ்மசரீரமென்று பெயர்.

சிஷ்:—பதினேழு என்று சொல்லப்பட்டவைகள் எவை?

குரு:—ஞானேந்திரியங்கள் ஐந்து. கர்மேந்திரியங்கள் ஐந்து. பிராணன் முதலிய வாயுக்கள் ஐந்து. புத்தி ஒன்று. மனம் ஒன்று. இவைகளே பதினேழு சங்கியைகளாகும்.

சிஷ்:—ஞானேந்திரியங்கள் எவை?

குரு:—சுரோத்ரம், த்வக்கு, நேத்ரம், ஜிஹ்வா, கிராணம் என்பவைகளே.

சிஷ்;—சுரோத்ரேந்திரியம் என்றால் என்ன?

குரு.—காதை விட்டு, காதுக்குள்ளிருக்கும் ஆகாச தேசத்தை ஆச்ரயமாக உடையதும் சப்தத்தை கிரகிக்கக்கூடிய சக்திவாய்ந்ததுமான இந்திரியத்துக்கு சுரோத்ரேந்திரியம் என்று பெயர்.

சிஷ்:—த்வக்கிந்திரியம் என்றால் என்ன?

குரு:—த்வக்கைக்காட்டிலும் வேறாயும் துவக்கையே பிடிப்பாக உடையதாயும் கால் முதல் தலை வரை வியாபித்திருப்பதும் சீதோஷ்ணம் முதலியஸ்பரிசத்தைகிரஹிப்பதில் சக்திபொருந்தியதுமான இந்திரியம் துவக்கிந்திரியம் எனப்படும்.

சிஷ்:—சக்ஷுர் இந்திரியமென்றால் என்ன?

குரு:—நமது பார்வைக்கு வெளிப்படையாய் தோணும் கோளகங்கள் இல்லாமலும் அந்த கோளகங்களை ஆச்ரயித்தும் கருப்பான கருவிழிகளின் நுனியிலிருப்பதும் ரூபம் முதலியவைகளை கிரஹிக்கக் கூடிய சக்திபொருந்திய இந்திரியமே சக்ஷுர் இந்திரியம் எனப்படும்.

சிஷ்.—ஜிஹ்வேந்திரியம் என்றால் என்ன?

குரு:—ஜிஹ்வமில்லாததும் ஜிஹ்வையடைந்திருப்பதும் ஜிஹ்வையின் நுனியிலிருந்துகொண்டு ரஸம்முதலியவைகளை கிரஹிக்கும் சக்தி வாய்ந்த இந்திரியத்துக்கு ஜிஹ்வேந்திரியம் எனப்பெயர்.

சிஷ்:—கிருணேந்திரியம் என்றால் என்ன?

குரு:—நாசிக இல்லாததும் நாசிகையின் நுனியை ஆச்ரயித்திருப்பதும் கந்தம்முதலியவைகளை கிரஹிக்கக்கூடிய சக்தியோடு கூடின இந்திரியம் கிருணேந்திரியம் எனப்படும்.

சிஷ்:—கர்மேந்திரியங்கள் என்றால் எவை?

குரு:—வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்கிறஇவ்வைந்துகளே.

சிஷ்:—வாகிந்திரியம் என்றால் என்ன?

குரு:—வாக்கு இல்லாததும் வாக்கையடைந்திருப்பதும் அஷ்டஸ்தானங்களில் இருப்பதும், சப்தத்தை உச்சரிக்கக் கூடிய சக்தி வாய்ந்த இந்திரியத்துக்கு வாகிந்திரியம் எனப்பெயர்

சிஷ்:—எட்டு ஸ்தானங்கள் எவ எவை?

குரு:—உரஸ், கண்டம், சிரஸ், தாலு, ஜிஹ்வா, தந்தம், ஒஷ்டம், நாசிகா என்பவைகளே.

சிஷ்:—பாணீந்திரியம் என்றால் என்ன?

குரு:—பாணி இல்லாததும் கரதலத்தை ஆச்ரயித்து இருப்பதும் கொடுப்பது, எடுப்பது, கிரஹிப்பது முதலியசக்தியோடுகூடிய துமான இந்திரியம் பாணீந்திரியம் எனப்படும்.

சிஷ்:—பாதேந்திரியம் என்றால் என்ன?

குரு:—பாதமில்லாததும் பாதப்பிரதேசத்தை ஆச்ரயித்து இருப்பதும், கமனாகமன சக்தியையுடையதுமான இந்திரியத்துக்கு பாதேந்திரியமெனப் பெயர்.

(இன்னும் வரும்) உப-பத்திராதிபர்.

---

## பொன்மலையில் பிரம்மஸ்ரீ போலகம் சுந்திரசாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்ட பகவத்கீதா உபந்நியாஸத்தின் சுருக்கம்.

7வது அத். சு. 14. சர்வப்பிரயத்தினம் செய்தும் பகவானை அறியமாட்டார்களாவெனில் அறியக்கூடும் என்றும், அந்த அறிவினால் கிடைக்கக்கூடிய பலம் என்னவென்றும், அவ்வறிவுக்கு முக்கிய ஸாதனம் ஸகுணமான தன் ஸ்வரூபத்யானம் என்றும் இந்த சுலோகத்தினால் ஸ்ரீபகவான் நிரூபிக்கிறார்.

என் சுத்த ஸ்வரூபத்தை எவர்கள் பிரத்தியக்ஷமாக அறிகிறார்களோ அவர்கள் திரிகுணாத்மகமான மாயையை நிவர்த்தி செய்து கொள்ளுகிறார்கள். ஞானமன்னியில் அந்த மாயை நிவர்த்தியாகக் கூடியதல்ல,

மாயை எங்கேயுள்ளது,எதைவிஷயீகரித்திருக்கிறது, அதின் பிரமாணம் யாது,ஸ்வரூபம் என்ன, யாருக்கு அது அதீனம்? என்கிற இந்த 5கேள்விகளுக்கும் பூர்வார்த்தத்திலுள்ள பதங்களினால் சமாதானம் சொல்லப்படுகின்றன. அதில் "தெய்வீ" என்ற பதத்தால் சுத்த ஜ்யோதிஸ்வரூபமான பிரம்மத்தை ஆச்ரயித்திருக்கிறது. அதையே விஷயீகரித்திருக்கிறது. நான் அறியாதவன் என்று ஜீவர்களிடத்தில் அஞ்ஞானத்தின் அனுபவம் எப்படி பொருத்தமாகும் என்றால் பழுக்கக் காய்ச்சின இரும்பை இரும்பு சுடுகிறது என்கிறோம். ஆனால் அந்த சூடு அக்னிக்குத்தான் உடையது.

ஆனாலும் அந்த நெருப்பின் சூட்டை இரும்பு சுடுகிறதென்று விவகரிப்பதுபோல் அஞ்ஞானத்திற்கு ஆச்ரயமான பிரம்மசைதன்னியத்தின் சேர்க்கை. அதாவது தாதாத்மியத்தினால் ஜீவர்களிடத்தில் அவ்வஞ்ஞானம் தோன்றுகிறது. "ஏஷா" என்னும் பதத்தினால் நான் அறியாதவன் என்கிற சாக்ஷி பிரத்தியக்ஷம். அஞ்ஞானம் என்றும் மாயாஸ்வரூபத்தில் பிரமாணம். "குணமயீ" என்ற பதத்தினால் ஸத்வ ரஜஸ் தமோகுணங்களின் சேர்க்கையே அதின் ஸ்வரூபம் "மமமாயா" என்ற பதத்தினால் ஈச்வரனுக்கே அதீனம். இம்மாயையை நிவர்த்தி செய்யக்கூடிய ஸ்வரூபஸாக்ஷாத்காரத்தின் உதயமானது எதிரில்தோன்றுகின்ற நீலமேகச்யாமளமாயும், ஸகலலோக மனோஹரமாயும், அதிமானுஷசுந்திரமாயும், பிரகாசிக்கின்ற எனது திவ்ய விக்ரஹத்தை சரணமடையவர்களுக்கு ஏற்படும் என்றும் இதன் கருத்து. அவ்விதம் தியானம் செய்பவர்களைக் கண்டால் கோபமுள்ள தபஸ்வியைக்கண்ட வேசிய ஸ்திரீபோல் மாயையானது பயந்து தனதுவிலாஸத்தை வெளிப்படுத்தாமல் தானே விலகி விடுகின்றது. ஆதலால் ஸகுண பிர்மத்யானம் செய்பவர்களுக்கு மாயாவிலாஸத்தைக்கூட கடப்பது மிகவும் சுலபமாகும்.

சு. 15 உபாயம் சுலபமாய் இருக்கும்போது ஏன்ஜனங்கள் என்னை பஜிக்கிறதேயில்லையெனில் அவர்களுடைய பாபம் தான் அதற்குக் காரணம். அந்தப்பாபிகள் நான்கு விதம். 1. மூடர்கள் அதாவது விவேகமற்றவர்கள். நல்ல கார்யங்கள் கெட்ட காரியங்களின் பாகுபாட்டை அறியாதவர்கள் தங்களுடைய சாப்பாடு தூக்கத்தோடு நிற்பவர்கள். ஈச்வரன் உண்டென்பதை அறியாதவர்கள்.

2. நராதமர்கள்:— இவர்களுக்கு ஈச்வரன் உண்டென்பது தெரியும் நம்பிக்கையும் உண்டு ஆனால் சோம்பேறித்தனத்தால் ஈச்வரனை அறிய பிரவிர்த்தி செய்யாதவர்கள் 3. மாயாபஹ்ருதஞானர்கள். சோம்பேறித்தனமில்லாதவர்கள் ஈச்வரனுடைய ஐச்வரியம், ஞானம், மஹிமை இவைகளை குதர்க்கங்களால் அசம்பாவிதம் என்று நினைக்கிறவர்கள். 4. அசுரசுபாவமுடையவர்கள் அதாவது ஈச்வரமஹிமை முதலியன தெரிந்தும் அவனிடம் துவேஷத்தை அவலம்பித்து அஹங்காரத்தினால் தன்னையே

தெய்வம் என்று கொண்டாடுகிறவர்கள். அதோடு நிற்காமல் ஹிரண்யகசிபு, வேனன் போன்றவர்கள்போல் பிறரையும் தன்னையே ஈச்வரனாக எண்ணும்படி கட்டாயப் படுத்தல். இப்படிப் பட்ட பாபிகளும் மூடர்களும் ஆத்மஸ்வரூபஞானமற்றவர்களும் அசுர சுபாவத்தையுடையவர்களும் மனிதரில் கடையோருமாக இருக்கிறவர்கள் என்னை சரணமடைகிறதில்லை. இவர்கள் முறையே ஒருவரைவிட அடுத்தவர் அதிக பாபி என்று தெரிந்துகொள்.

(இன்னும் வரும்.) வி. என். ராமநாதன்

---

# ஸ்மிருதி செய்தவர்களின் ஆராய்ச்சி.

(உ௨0-வது பக்கத்தொடர்ச்சி)

சந்திரிகாகாரர் போதாயனர் இன்னும் பல ஸ்மிருதிகாரர்களும் அங்க வங்க களிங்க ஆனர்த்த மகத ஸௌராஷ்டிர தக்ஷிணபத ஸிந்து ஸௌவீர தேசங்களில்கூட பிராம்மணன் வஸிக்கக் கூடாதென்று நன்கு தடுக்கின்றனர். ஏனெனில் இவையெல்லாம் ஆர்யாவர்த்த தேசத்தை விட்டு விலகிய மிலேச்ச தேசத்திற்குச் சமீபமானவை என்றும் பாபிகளின் ஸம்பர்க்கத்தால் கெட்டவை என்றும் கருதுகின்றனராம் ஆகவே இவ்விதம் எங்கு வஸிக்கலாமென்று ரிஷிகள் கூறினரோ அத்தேசங்களில் வஸித்துக் கொண்டு பிராம்மணன் கன்மங்களைச் சரிவர அநுஷ்டிப்பானேயாகில் அவன் மட்டிலுமல்ல அவன் குடும்பம் சுற்றத்தாரோடல்லாமல் அவனது கிராமமும் பட்டணமும் அவனது கண்ணில் படுபவர்களும் பாபத்தை ஒழித்து சுத்தமாவார்கள் என்பதில் ஐய்யமில்லை. இதை அனுஸரித்தேஔவையாரும் "தொல்லுலகில் நல்லாரொருவருளரேலவர் பொருட்டெல்லார்க்கும் பெய்யுமழை" என்றார். இங்கு இன்னொன்று கவனிக்கத்தக்கது. இவ்விதம் ஆர்யதேசமென்று கூறி அதன் இலக்கணமாய் கிருஷ்ணஸாரம்என்றமானும் தர்ப்பமும் நதியும் இருந்தாலும் ரங்கூன்பர்மாமுதலிய தேசத்தை அனார்யதேசமென்றே விலக்கினர், இதன் காரணம் ஸமுத்திரத்தில் கப்பல் யாத்திரை செய்ய வேண்டியதென்பது முக்கியமாயினும் மற்றொன்றுமுண்டு. என்னவெனில் இந்தக்கண்டமொன்று தான் புண்யபூமி என்பது அவர்களின் கொள்கை. ஆதல்பற்றி

யே இமயமலை விந்தியம் கிழக்கு சமுத்திரம் மேற்கு சமுத்திரமென்று நான்கெல்லை கட்டி விட்டனர். மற்றும் காவேரி துங்கபத்திரை கிருஷ்ணா கௌதமீ பாகீரதி என்ற ஐந்துநதிக்கும் பஞ்சகங்கை என்றும் மற்றுமுள்ள இத்தேச புண்யநதிகளையே குறித்துக் கூறுவதாலும் ரிஷிகளின் வாசஸ்தலம் இதுதானென்பதும் இங்குதான் கன்மபூமி என்றும் தெள்ளென விளங்குகிறது. இனி இத்தேசம் உண்மையில் புண்யபூமியாயினும் பிராமணர்கள் கன்மத்தை வெறுத்துப் பாஷண்டர்களாய் விட்டனரே. இத்தகைய பிராமணன் எங்கு வஸித்தாலென்னவென்று கேட்கலாம். அவ்விதமாயினும் அது குற்றமாகாதென்பதை மேலே கவனிப்பாம்.

இனி இங்கு யுகதர்மம் கூறுவது மிகவும் பொருத்தமுடையதாகும். ஏனெனில் பலர் சாஸ்திரங்களின் கருத்தை யறியாமையால் வர்ணதர்மங்களில் இரண்டொன்றைக் காதில்கேட்டதை வைத்துக்கொண்டு அதையே கூறிக்கொண்டு ஒருவரையொருவர் இகழ்ந்து பேசுகின்றனர். உதாரணமாய் பிராமணனை இகழ ஆரம்பிக்கும் பிராமணனல்லாதார் பிராமணனைப்பார்த்து உன்னை சட்டைபோட்டுக்கொண்டு உத்யோகம் பார்க்கும்படி எங்கு சொல்லியிருக்கிறது காட்டில்வசித்து பிச்சைஎடுத்தோ கிழங்கு பழங்களைத்தின்றோ காலம் கழிக்கவேண்டியதுதானே என்ற, இதை நாம் மறுக்கவில்லை. நமது முன்னோர்கள் வானப்பிரஸ்தர்களாயும் சன்னியாஸிகளாயும் காலத்தைக்கழித்ததாய் இப்போதும் பிரவாத்தில் சொல்லிக்கொள்கிறோம். ஆகவே அது தவறுதலல்ல ஆயினும் சட்டைபோட்டுக்கொண்டு உத்யோகம் பார்க்கக்கூடாதென்று ஓரிடத்தும் கூறப்படவில்லை,மற்றுவிசேஷமான பெரியஉத்யோகம் அரசர்களதுஸபையில் பிராமணர்களால்தான் ஏற்கப்பட்டு வந்திருக்கிறது. அவ்விதமே ஸ்மிருதியும்:—

सेनापत्यं च राष्ट्रं च दण्डनेतृत्वमेव च ।
सर्वराज्याधिपत्यं च ब्राह्मणो लब्धुमर्हति ॥

ஸெநாபத்யம் ச ராஷ்ட்ரம் ச தண்டநேத்ருத்வமேவ ச ।
ஸர்வராஜ்யாதிபத்யம் ச ப்ராஹ்மணோ லப்துமர்ஹதி ॥

ஸேனாதிபதித்துவம் ராஜ்யம் வகிக்கும் தன்மை தண்டநீதி அடையும் தன்மை ஸர்வலோகத்திற்கும் அதிபதியாகும் தன்மையை

யும் பிராமணன் அடையத்தகுதியுடையவன் என்றார். இங்கு அடையத்தகுதியுடையவனென்றதால் இவனுக்கு எப்போதும் விருத்தி இல்லையென்று மட்டிலும் ஏற்பட்டதேதவிர அடையவே கூடாதென்பதல்ல. அயோத்தியில் தசரதர் இறந்த பிறகு ராஜ புத்திரர் ஒருவருமில்லாததால் வசிஷ்டரே பரதன் வருமளவும் ராஜ்யத்தை நடத்தினாரென்று ராமாயணத்தில் தெரிகிறது. எக்காலத்தும்மந்திரி பிராமணன்தான். கடைசியில் திருமலைநாயகருக்கும் நீலகண்ட தீக்ஷிதர் மந்திரியாய் இருந்திருக்கிறார். ஆகையால் பிராமணன் மூக்கைப்பிடித்துக்கொண்டு காட்டில்தான் உட்கார்ந் திருக்கவேண்டுமென்பதல்ல. யுகதர்மம் ஒரே மாதிரியல்ல வென்பதை நன்கு கவனிக்கவேண்டும். அத்தகைய யுகதர்மத்தைஇங்கு கவனிக்கலாம்.

உலகில் இம்மதம் அனாதி ஸித்தமென்பதை யாவரும் மறுப்பின்றி ஒப்புக்கொள்ள இது ஒரு அத்தாக்ஷியாகும். அதாவது நம்மதத்தை வேறு எம்மதத்திலும் காலத்தின் போக்கைப்பற்றிக் கூறப்படவேஇல்லை நம்மதத்திற் கூறியிருக்கும் காலஅளவைப் பாருங்கள் இப்போது நடைபெறும் நாளுக்குக்கிழமையையும் சென்ற இரண்டொருதினத்தின் கிழமையையும் வரப்போகும் சின்னாட்களின் கிழமையையும் மட்டிலும் நாம் அறிகிறதில்லை. மற்று அதன் பக்ஷம் மாதம் அயனம் வருடங்களின் பெயரையும் அறிகிறோம். இப்போது க்ஷயவருடமென்போம் வரப்போவதை ப்பிரபவ வருடமென்போம். பிரபவ என்பது வருடத்தின் ஆரம்பம். இப்போது கடைசி வருடம் நடக்கிறதுஇவ்விதம் 60 வருடங்கள் இவ்வளவு சென்றதென்று கவனித்தால் நமது அனுமானம் எங்கேபோய் நிற்கும் நிற்க நிலையில்லை. ஆயினும் புத்திமானாயின் அவன்இவ்விதமனுமானிக்கலாம் வருடத்திற்குப்பெயர் 60என்று நிறுத்துவானேன் மாதம் 12 என்றும் அயனம் 2 என்றும் திதி15 என்றும் கிழமை 7 என்றும்வரையறைபெற்றுநிற்பானேன்என்று இவ்விதம் யோசிப்பவனுக்கு ஆராயப் புத்தகங்கள் ஏராளமாய் இப்போதுமிருக்கின்றன. இவ்விதம் ஆராய்ந்துபார்க்க ஸாமான்ய ரீதியில் புராணங்களுமிருக்கின்றன. இவ்விதம் ஆலோசித்துக் கொண்டுபோனால் வருடங்களோடுமட்டிலும் நின்றுவிடுகிறதில்லை அடுத்தபடியாய் யுகம் என்று ஒரு பெயர் கொடுக்கின்றனர். அது நான்கென்பார் நம்மாலும் மேல் உலகில் தேவர்கள் இருப்பதாய்

நாம் நிச்சயமாய் நம்பி இருக்கிறோம். அவர்களுக்கு நம்மைப் போல் பௌதிக சரீரம் இல்லையென்றும் தேஜோமயமானசரீரம் உள்ளவர்கள் என்றும் அவர்கள் அணுவாய் நம்மைச்சுற்றிலும் வசிப்பார்களென்றும் அவர்கள் எங்கும் பரவி இருக்கக்கூடுமான தால் மந்திரத்தினால் யார் யார் எந்த எந்த பாவனையுடன் அழைத் தாலும் அங்கு நெருங்கக்கூடுமென்றும் நமது பூரண நம்பிக்கை நம்மைப்போல் அவர்கள் கையால் எடுத்து வாயிற்போட்டு புசிக்க வேண்டுமென்பதல்ல அவர்கள் பார்த்தே புசித்த திருப்தியை யடைந்து விடுவார்கள். அவர்களுக்கு நம்மைப்போல் பகல் இரவு முண்டென்றாலும் இதிலும் பேதமுண்டு. நமக்கு சூரியன்உதித்து அஸ்தமித்து மறுபடி உதிக்குமளவும் ஒருநாள் என்று பெயர்' நமக்கு இவவிதம் 365 நாட்கள் சென்றால் ஒரு வருடமாயிற் றென்போம். இத்தகைய ஒரு வருடம்தான் தேவர்களுக்கு ஒரு நாளாகும் ஆறுமாதம் அவர்களுக்குப் பகலாம் ஆறுமாதம் இர வாம் அதுகொண்டே உத்தராயணம் தக்ஷிணாயன மென்றிரண்டு கூறப்படுகிறது. உத்தராயணம் அவர்களுக்குப் பகல் தக்ஷிணா யனம் இரவு அது கொண்டே உத்தராயணத்தில் நாம் சுபகன் மாக்களைச் செய்வோம். தக்ஷிணாயனத்தில் அனேக அசுபங்கள் நேருகின்றன. இவை யெல்லாவற்றையும் கண்டறிந்தவர்கள் நம்மதப்பெரியோர்கள் தான்.

இனியுகம் நான்குஎன்று சொல்லிக்கொடுத்த பெரியோர்கள் அவைகளுக்குப் பெயரையும் அவைகளின் ஆயுளையும் கணக்கிட் டிருக்கிறார்கள். கிருதம் த்ரேதா த்வாபரம் கலி என்றுபெயர் இவைகளுக்கு கிருதயுகத்திற்கு தேவவர்ஷக் கணக்குப்படி 4000 வருடம். த்ரேதாயுகத்திற்கு 3000, த்வாபர யுகத்திற்கு 2000, கலி யுகத்திற்கு 1000 வருடமாம். இதில் கிருதயுகத்தின் ஆரம்பம் முதல் 400 தேவவருடம் வரை ஸந்தியா என்றும் 400 வருடம் முடிவில் சந்தியாம்சம் என்றும் பெயராம். இவ்விதமே த்ரேதா யுகத்திற்கு 300-ம். த்வாபரத்திற்கு 200-ம், கலிக்கு 100வருடமும் ஸந்தியா ஸந்தியாம்சமெனப்படும். அதாவது ஒவ்வொருயுகம் ஆரம்பித்து ஸந்தியாஎன்ற வருடங்களில் தர்மம் மேன்மேலும் வளர்ச்சிகொண்டும் ஸந்தியாம்சத்தில் தர்மம் குன்றிக்கொண்டும் வருமென்பது அறியத்தக்கதாகும். இனியுகம்தோறும்மனிதர்கள் மாறுவார்களென்பதை கவனிக்கலாம். மனு:—

अरोगास्सर्वसिद्धार्थाश्चतुर्वर्षशतायुषः ।
कृतत्रेतादिष्वेषामायुर्ह्रसति पादशः ॥

அரோகாஸ்ஸர்வஸித்தார்த்தாஶ்சதுர்வர்ஷஶதாயுஷ: ।
க்ருதத்ரேதாதிஷ்வேஷாமாயுர்ஹ்ரஸதி பாதஶ: ॥

கிருதயுகத்தில் மனிதர்கள் யாவரும் ரோகமேயற்றவர்களாயும் மனதில் நினைத்ததை எல்லாம் அவ்வப்போது அடைந்துகொண்டும் 400 வயதுள்ளவர்களாய் இருந்தனர். பிறகு த்ரேதாயுகத்தில் ஏதோசில ஸாதனக்குறைவால் 300 வருடம் ஆயுளையும் த்வாபரத்தில் 200 வருடத்தையும் கலியில் 100 வருடம் ஆயுளையும் பெற்றனர் என்கிறார். இங்கு கவனிக்கவேண்டியதை கவனிக்குமுன் இதை அறிவோம். யுகத்திற்குத் தகுந்தபடி வயதைச் சொன்னதைப் பார்த்தாலே அவ்வம் மனிதற்களுக்கு எல்லாயுகத்திற்கும் பொதுவாய் ஓரேதர்மம் ஏற்பட்டிராதென்பது திண்ணமென்று வைத்துக்கொள்ளலாம் இனி இதனுள் ஆராய்வாம்.

M. N. சுப்பிரமண்ய சாஸ்திரி.

---

உ

# மதிப்புரை.

---

## ஹிந்துமதபோதினீ.

இப்பெயர் வாய்ந்த ஒரு தமிழ் வாரப்பத்திரிகை அதின் பத்திராதிபர் டி. கெ. ராமபத்திரசர்மா அவர்கள் அனுப்பியதை வரப்பெற்றோம். இது திருவனந்தபுரத்திலிருந்தும் சென்ற சித்திரை ௴ 29உ (12—5—27)ல் துவக்கப்பட்டு ஒவ்வொரு குருவாரம் தோறும் வெளிவருகின்றது இது தன் பெயருக்குற்றவாறு இந்துமதத்தின் அபிவிருத்தியை முக்கியமாகக் கருதி அதற்கு வேண்டிய பல ஸாதனங்களை வெளியிட முன் வந்திருப்பதாகத் தெரிகின்றது. நம் தேசத்தில் பலபத்திரிகைகள் தற்காலம் வெளிவந்தாலும் அவைகள் நம் ஜாதி மதம் என்பதை முக்கியமாகக் கொள்ளாமல் வேறான பல விஷயங்களை வெளியிடுகின்றனவென்

ப்தும் பிரஸித்தமே. அவ்விதமின்றி நம் மதத்தை அவசியம் விரு த்தி செய்யவேண்டும் அதினால் தான் ஹிர்துக்களுக்கு இம்மை யிலும் மறுமையிலும் சிரேயஸ் உண்டாகுமென்றும் கருதி சாஸ் திரங்களின் தத்வார்த்தங்களை நன்கறிந்து அவைகளையே ஜனங்க ளுக்கும் போதிக்கவேண்டுமென்று முன்வந்திருக்கும் இப்பத்திரி கையானது இந்துக்களாயிருக்கும் எவர்களுக்குத்தான் ஸந்தோ ஷத்தை யுண்டு பண்ணாது. இது குருவாரத்தில் துவக்கப்பட்டி ருப்பதால் ஸ்ரீலோக குருவாகிய ஸ்ரீபரமாசார்யாளின் அநுக்ரஹ பலத்தால் ஆர்யதர்ம பத்திரிகை போல் ஸநாதன தர்மநெறியினி ன்றும் ஓரடிகூடமாறாமல் தம்கொள்கையை முக்யமாகக்கொண்டு யாதொரு இடையூறுமின்றி மென்மேலும் அபிவிருத்தியடைந்து லோகக்ஷேமத்தை உண்டுபண்ண வேண்டுமென்று ஜகதாசார்யா ளாய் விளங்கும் ஸ்ரீகைலாஸவாஸியான ஸ்ரீபரமேசுவரனை பிரார்த் திக்கின்றோம்,

இதின் வருஷச் சந்தா ரூ 5—0—0

---

உ

## தமிழ் வருஷ கியாலண்டர்.

தஞ்சைமித்திரன் பத்திராதிபரவர்களால் அனுப்பப்பட்ட கியாலண்டரை வரப்பெற்றோம். இதில் பிரபவஸூ சித்திரைமீ முதல் துவக்கப்பட்டு பெரிய எழுத்துக்களால் தமிழ் மாத தேதி களும் சிறிய எழுத்துக்களால் இங்கிலீஷ் தேதிகளும் போடப் பட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் அந்தந்தமாதத்திற்கு வேண்டிய தேதி, வாரம், திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவைகளுடன் கூடிய பஞ்சாங்கமும் ஒவ்வொரு ஷீட்டிலும் மத்தியில் முருகக் கடவுளுடைய படத்துடன் அச்சிடப்பட்டிருக்கின்றது. முடி வில் அந்தந்த மாதத்தில் நடக்கும் விசேஷ உத்ஸவங்களின் தேதியும், ராகுகாலம், குளிகை, எமகண்டம், வாரசூலை முதலிய வைகளும் இருக்கின்றன. நம் தேசத்திற்கு இது அவசியமென்று யாரும் கருதக் கூடியதே!!.

ஆர்ய. உபபத்திராதிபர்.

---

நெரிஞ்சிப்பேட்டையில்

# ஆசார்யேந்திர விஜயம்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் உத்தம க்ஷேத்திரமான காவேரி பவானீ ஸங்கமஸ்தலத்தில் தீர்த்த ஸேவையும் வேதநாயகி ஸமேதரான ஸ்ரீ ஸங்கமேசுவர ஸேவையும்செய்துகொண்டு அங்குள்ள பக்தஜனங்களை அனுக்ரஹிக்க எண்ணி 6—4—27-ல் பவானிக்கு விஜயஞ்செய்தார்கள். இது சங்கதிபை கோயமுத்தூர் ஜில்லா பவானி தாலுக்கா மேட்டூர் என்ற கிராமத்தில் தக்காலம் கட்டப்படுகிற அணைவேலையை உத்தேசித்து மேட்டூரில் வாஸஞ்செய்து வருகிற பல ஜில்லா வாஸிகளான பக்தஜனங்களிருந்து நாமெல்லோருமொன்றுயச் சேர்ந்திருக்குமிவ்விடத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளையும் த்ருபுர ஸுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திர மௌளீசுவராதி தேவதைகளையும் ஸந்தர்சனஞ்செய்து நாஸ்திகதையை வெரட்டி ஆஸ்திகதையைப் புகட்டும் ஸ்ரீஸ்வாமிகளின் வாகமிருதத்தை பானம்பண்ணி ஸ்ரீஸ்வாமிகளின் அனுக்ரஹம் பெற்று க்ருதார்த்தாளாவதுந்தவிர அத்புதகாமாய் நடக்கிற இக்காவேரி அணைவேலையையும் மற்ற விசேஷத்தையும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்குக் காட்டிவைக்க வேண்டுமென்றும் தீர்மானித்துக்கொண்டு பவானி போய்ஸ்ரீ ஸ்வாமிகளை ஸந்தர்சநஞ்செய்துகொண்டு தங்களது கோரிக்கையைவிக்ஞாபித்துக் கொண்டார்கள் பக்தபாரதீனர்களாயும் பரமாஸ்திகர்களாயுமிருக்கிற ஸ்ரீஸ்வாமிகளும் அங்கீகரித்து அனுக்ரஹித்தார்கள்.

பவானிக்கும் மேட்டூருக்கும் 26 மைல் தூரமிருக்கிறது. மத்தியில் 16.வது மைலில் நெரிஞ்ப்பேட்டை என்னும் கிராமத்தில் வைசிய குரு ஸ்ரீ தர்மசிவாசார்ய ஸ்வாமிகளின் மடம் இருக்கிறது இம்மடத்தில் தத்காலம் இருக்கிற ஸ்வாமிகளின் வித்யாப்யாஸவிஷயமாய் நமதாசார்ய ஸ்வாமிகள் மிகுதியான சிரத்தை எடுத்துக்கெண்டு தங்களாஸ்தானத்தைச்சேர்ந்த M. S. கிருஷ்ண சாஸ்திரிகள் என்ற மஹாநு பாவரை அனுப்பிக்கொடுத்து அநுக்ரஹித்தார்கள். ஆசார்ய மூர்த்தியின் அநுக்ரஹ விசேஷத்தால் இம்மடாதிபதிகளும் விசேஷபாண்டித்யம் பெற்று விளங்குகிறுர்.

இக்காரணத்தைக் கொண்டு ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு இம்மடத்தில் விசேஷமான விசுவாஸமுண்டு. ஆனதால் இம்மடத்தில் விஜயம் செய்ய உத்தேசித்து தத்காலம் தஞ்சைஜில்லாவில் ஸஞ்சாரஞ் செய்துவருகிற இம்மடாதிபதிகளுக்கு தந்திமூலம் தனதுவரவை அரிவித்து இவ்விடத்திலிருக்கும் ஹேஜண்டு முதலிய அதிகாரி களுக்கும் அரிவித்து அநுக்ரஹித்தார்கள்.

சிரிய கிராமமானதாலும் இதுவரை இத்தகய பெரியோர் களின் விஜயம் நேராததாலும் ஸ்ரீ மதாசார்யாளின் வருகையைக் கேட்ட இக்கிராம வாஸிகளான மஹாஜனங்களுக்கு ஏற்பட்ட ஸந்தோஷத்திற்களவேயில்லை. உடனே வீதிகளையெல்லாம் சுத் தஞ்செய்து புழுதிகளடங்க ஜலஸேகஞ்செய்து தோரணங்களா லும் வாழைமரங்களாலும் எங்குமலங்கரித்து உத்தமமானவாத்ய கோஷத்துடனும் வேதபாராயணத்துடனும் பூர்ணகும்பத்துட னும் சிவன்கோவில் விஷ்ணுகோவில் ப்ரஸாதத்துடனும் நானா விதமான பலோபஹாரங்களுடனும் 7—4—27 ராத்திரி 8 மணிக்குக் கிராமத்தின் எல்லையில் ஆம்பலோடையானது சந்தி ரனை எதிர்பார்ப்பதுபோல ஸ்ரீ மதாசார்யாளின் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிறகு 10 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமி களின் வரவை ஸூசிக்கின்ற வாத்யசப்தங்கேட்டதும் ஆனந்த பரவசராளாகி எதிர்கொண்டு ஸ்ரீ ஸன்னிதானஞ்சேர்ந்து பூர்ண கும்பஸமர்ப்பணமும் சிவ விஷ்ணு ப்ரஸாத ஸமர்ப்பணமுஞ் செய்து வந்தன புரஸ்ஸரம் அநுக்ரஹமும் பெற்றார்கள். பரம சாந்தராயும் தேஜோவான்களாயுமிருக்கிற ஸ்ரீமதாசார் யாளின் புன்னகை புரியும் முகசந்திர ஸந்தர்சனத்தி னாலேயே அகமகிழ்ந்த ஸகல ஜனங்களுக்கும் யோகக்ஷேம விசாரரூபமான ஸ்ரீ ஸ்வாமிகளின் வசனாம்ருதமானது அளவில்லாத சந்தோ ஷத்தை அளித்துவிட்டது. பிறகு உபநிஷத்பாராயணபுரஸ்ஸரம் ஸ்ரீ தர்மசிவாசார்ய சுவாமிகளின் மடாலயத்துக்கு அழைக்கப் பட்டார்கள். ஸ்ரீ மடம் வந்ததும் அம்மடாதிபதிகளின் யோக க்ஷேமத்தையும் அவாள் ஸஞ்சாரஞ்செய்யும் ப்ரதேசத்தையும் விசாரித்து விட்டு அவாது குணாதிசயங்களைப்பற்றி விசேஷ மாகச் சொல்லி நாம் வந்தசமயம் அவாள் இல்லை யென்பது ஒருகுறைவாகஇருந்தாலும் சிஷ்யகுணங்களை எடுத்துச் சொல்ல

உசிதமான பரோக்ஷ பாவங்கிடைத்தது சந்தோஷத்திற்கும் காரணமாயிருக்கிறது என்று உபன்யஸித்துவிட்டு அவ்விடத்திய ஜனங்களின் பக்தியையும் சிரத்தையையுங்கண்டு களிப் படைந்தார்கள்.

பிறகு வெடியற்காலம் புரப்பட்டு 8—4—27 காலை 7மணிக்கு மேட்டூர் விஜயஞ்செய்து தாபத்ரய நிவாரகராயும் யோகலிங்க மூர்த்தியாயும் விளங்குகிற ஸ்ரீ சந்திரமௌளீசுவராதி தேவதாஸந் தர்சனத்தினுலேயும் ப்ரத்யக்ஷ தெய்வமான ஸ்ரீமதாசார்யேந்த்ர ஸந்தர்சத்தினுலேயும் தீர்த்தப்ரஸாத ஸ்வீகாரத்தினுலேயும் கிரு தார்த்தாளாயும் சுத்தாத்மாக்களாயுமிருக்கிற ஸகல ஜனங்களுக் கும் பக்திமார்க்கத்தை எடுத்துக்காட்டி ஆஸ்திகதையைப் புகட் டும் அனேக விதமான உபன்யாஸங்களைச் செய்துகொண்டு 3நாள் வாஸஞ் செய்து விட்டு 11—4—27 காலை 7மணிக்கு நெரிஞ்சிப் பேட்டைக்கு விஜயஞ்செய்தார்கள். அன்று தர்மசிவாசார்ய சுவாமிகளின் மடத்தின் ஆதரவில் பிக்ஷை பாதபூஜை முதலிய கைங்கர்யங்கள் நடத்தப்பட்டது.

இவ்வூருக்கு வடமேற்கில் ஒரு மைல் தூரத்தில் 'பாலமலை' என்ற ஓர் பர்வதமுண்டு இம்மலையில் மா, பலா, சந்தணம், தேக்கு, என்ற உத்தம விருக்ஷங்கள் நிறைந்திருக்கின்றன. பல விதமான மூங்கில்கள் இங்கு கிடைக்கும். மான்கள் கூட்டங்கூட் டமாய் ஸஞ்சரிக்கும். இம்மலையில் உன்னதமான சிகரங்கள் மூன்று உண்டு. அதில் மத்யம சிகரத்தின் வடபாகத்தில் ஸித்தர்களா லர்ச்சிக்கப்பட்ட ஸித்தேசுவராலயம் ஒன்று இருக்கிறது. அதி ல் ஸ்வயம்புவான இரண்டு லிங்கங்கள் இருக்கின்றன. ஒன்றை சிவனுகவும் மற்றொன்றை விஷ்ணுவாகவும் பாவித்து விபூதியும் நாமமும் தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் இம்மூர்த்திகளை தர்சிக்க உபய மதஸ்தர்களும் போகிறார்கள். இப்பொழுதும் மலையேறும் ஜனங்களை எங்கே போகிறீர்கள்? என்றால் ஸித்தேசு வர தர்சனத்திற்கென்று சொல்லுவார்கள். போகும்போதோ வென்றால் 'கோவிந்த' என்ற நாமதேயத்தைத்தான் சொல்லிக் கொண்டு போவார்கள். பிரதி சனிக்கிழமையும் 500 ஜனங்களு க்குக்குறையாமல் தர்சனத்துக்குப் போய்வருவார்கள், பங்குனி,

சித்திரை, இவ்விரண்டு மாதங்களில் பிரதி வாரமும் 2000 ஜனங்களுக்கதிகமாகவே போவார்கள். கோரின வரத்தை யளிக்குந்தெய்வம் இதைத்தவிர வேறில்லை என்பது இந்தப்பக்கத்து ஜனங்களின் உறுதி.

यादृशी भावना यत्र सिद्धिर्भवति तादृशी ।

யாத்ருஶீ பாவநா யத்ர ஸித்திர்பவதி தாத்ருஶீ ।

என்ற நியாயப்ரகாரம் பாவனுவிசேஷத்திற்கனுகுணமான ஸித்தியும் ஏற்பட்டு வருகிறது, இம்மலையில் 40 கிராமங்கள் உண்டு. வ்யவசாய ஜீவனமுள்ள சில மலயாளர்கள் வஸித்துவருகிறார்கள். ஆங்காங்கு ஜலவஸதிகளும் இருக்கின்றன. ஆலயத்திற்கு ஸமீபத்தில் தீர்த்தக்குளம் என்ற ஓர் சிறிய ஜலாசயம் இருககிறது. அதில் என்னாளும் ஜலம் நிறைந்தே இருக்கிறது. இது தான் போகிற ஜனங்களின் ஸ்னான பானாதிகளுக்கு உதவுகிறது. இவ்வாலயத்தில் வாரம் ஒரு முறை அதாவது சனிக்கிழமை மாத்திரந்தான் பூஜை நடககிறது. பூஜையும் அம்மலயாளிகளில் ஒருவனான பூசாரியால செய்யப்பட்டு வருகிறது, இவ்வாலயத்திற்கு உபயமாய் அளிக்கப்பட்ட பாத்திரங்கள் அனேகமாயிருக்கின்றன, இவைகள் மலைக்குப்போகும் ஜனங்களின் சமயலுக்குக் கொடுக்கப்படுகின்றன. இப்பாத்திரங்களின் உதவியால 3000 ஜனங்கள் வரையில் சமயல் செய்து கொள்ளலாம், இப்பாத்திரங்களை மரத்தடியில் தான் போட்டு வைககிற வழக்கம். கோவிலைக் கூடப் பூட்டுகிற வழக்கமில்லை. இப்படி இருந்த போதிலும் தெய்வத்தினிடம் உள்ள பீதியால் இதை யாரும களவாடத் துணிய மாட்டார்கள். இம்மலைக்குப்போக இரண்டு பாதைகள் உண்டு. ஒன்று பத்து மைல் தூரமிருககிறது. இந்த மார்க்கத்தில் செங்குத்தான பாதேசங்களில்லாததால ஏறுவது அதிக சிரமமாக இருககாது. மற்றொன்று மார்ககம் 7 மைல் தூரமுள்ளது. இம்மார்க்கததில போவது அதிக சிரமமாக இருக்கும். ஆனல் போகிற ஜனங்கள அனேகமாக இப்பாதையிலேயே தான் போகிறார்கள். இரண்டு மார்ககத்திலும படிககட்டு முதலான சௌகர்யங்கள் கிடையாது. நிழலுககு மாத்திரம் சிறசில இடங்களில் மாங்கள் இருக்கின்றன. தர்சனததிற்குப் போகும் ஜனங்கள் வெள்

ளிக்கிழமை வெடியற்காலம் 4. மணிமுதல் புறப்பட்டு சனிக்கிழமை 10. மணிக்குள் போவார்கள். அன்று பூஜைகள் நடந்து சாயங்காலம் 6. மணிக்கு அகண்டதீபம் (திருககோடி) எற்றின பிறகுதான் போஜனஞ் செய்வார்கள். மறுநாளும் அவ்விடமே இருந்து போஜனஞ்செய்துகொண்டு மத்யான்னம் 3. மணிக்கு மேல் புறப்பட்டு வருவார்கள். முரட்டுப் பாதையானதால் போய் வருவது ரொம்ப சிரமம்.

நமதாசார்ய ஸ்வாமிகள் அரண்யவாஸத்திலும் மலைவாஸத்திலும் க்ஷேத்திர தர்சனத்திலும் அதிக உதஸாஹமுள்ளவர்கள். ஆனதால் இப்பர்வதத்தைப் பார்தததும அதிக சந்தோஷம் அடைந்து அதில் உள்ள விசேஷங்களையும் ஆலயமுள்ள ப்ரதேசத்தையுமறிந்து அதை நேரில் போய் பார்க்கவேண்டுமென்றும் தண்டத்திற்கு உபயோகமான மூங்கில்களைத் தானுகவே கிரஹித்து வரவேண்டுமென்றும், தீர்மானித்துக கொண்டு மார்க்கம் தெரிந்தவர்களாய் 5 6 மனிதர்களைத்திட்டம் செய்துவைக்கும்படிக்கும் இவ்வூர்மஹாஜனங்களிடம்ஆக்ஞாபித்தார்கள. 11—4—27 வெடியற்காலம் 4 மணிக்குப் புரப்பட்டுப் போய்ப்பார்த்து விட்டு 12—4—27 மத்தியான்னம் 12மணிக்குள்ளாக வந்து விகிறதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அவ்விடததிலுள்ள சிரமங்களை அனுபவித்தவர்கள் ஒரே நாளில் போய்வருவது ரொம்ப சிரமம் என்றும் மார்க்கம் சௌகரியமாக இல்லை என்றும், பலவாராக விக்ஞாபித்துக்கொண்டும் ஸ்ரீஸ்வாமிகளின் குதூஹலம் மாறவில்லை. ஸங்கல்ப்பித்தபடியே 11—4—27 வெடியற்காலம் 4. மணிக்கு மிதமான பரிவாரத்துடன் அடிவாரஞ்சென்று ஸஹாயத்திற்காக மார்க்கந்தெரிந்த 9. மனிதர்களையும் 5, 6 பிராம்மணசிப்பந்திகளையும் 5, 6 இதர சிப்பந்திகளையும் அழைத்துக்கொண்டு 10 மைல் தூரமுள்ள மார்க்கமாக மலைஏற ஆரம்பித்தார்கள்: மத்தியிலுள்ள விசேஷங்களையும் மான் முதலிய ஜந்துக்களையும் பார்த்துக்கொண்டு 9.மணிக்கு ஸ்வாமி கோவில் போய்ச்சேர்ந்து மூர்த்தியின் வைபவத்தைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

(இன்னும் வரும்.)